# நமது தின கனி
காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI
Daily Morning

| Vol : 01 | Issue : 86 | 4 Pages | 28.10.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 86 | 4 பக்கங்கள் | 28.10.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## செக் குடியரசு: ஒரு மில்லியன் டாலர் பணத்தை ஹெலிகாப்டரில் இருந்து வீசிய பிரபலம்



சீனா, அக். 28

சீனாவின் முன்னாள் பிரதமர் லீ கெகியாங் (வயது68).2013ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் வரை பிரதமராக இருந்தார். இந்த நிலையில் கெகியாங், மாரடைப்பால் உயிரிழந்தார். ஷாங்காய் நகரில் வசித்து வந்த அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்தது.

பொருளாதார வல்லுநரான இவர், பல சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்தார். சீனாவின் தலைமைப் பொருளாதார அதிகாரியாக பத்து ஆண்டுகள் பணியாற்றினார். 1955ம் ஆண்டு அன்ஹுய் மாகாணத்தில் பிறந்த லீ கெகியாங், ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகத் தொடங்கி அரசியலில் நுழைந்தார். அவர் பீக்கிங் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். கம்யூனிஸ்ட் இளைஞர் கழகத்தில் ஈடுபட்டார். அவர் 1994ல் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அவர் மாகாண பதவிகள் மற்றும் அமைச்சகங்களில் பணியாற்றிய பிறகு 2007ல் கட்சியின் மத்திய குழுவில் சேர்ந்தார். சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் நம்பிக்கைக் குரிய தலைவர்களில் ஒருவராக லீ கெகியாங் இருந்தார்.

## அமெரிக்காவில் மாணவனுக்கு நிர்வாண படங்களை அனுப்பிய ஆசிரியை கைது



வாஷிங்டன், அக் 28

அமெரிக்காவின் மிசோரி செயிண்ட் ஜேம்ஸ் பகுதியை சேர்ந்தவர் ரிக்கி லின் லாப்லின் (வயது23). இவர் அப்பகுதியில் உள்ள பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வந்தார்.

இவர், 16 வயது மாணவனுக்கு தனது நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அனுப்பி உள்ளார். மேலும் மாணவனின் நிர்வாண புகைப்படங்களை அனுப்பும்படி கேட்டு உள்ளார். இவ்விவகாரம் பள்ளி முழுவதும் பரவியது.

இது தொடர்பாக தகவல் அறிந்த போலீசார் அந்த மாணவனிடம் விசாரணை நடத்தினர். அப்போது ஆசிரியை தனக்கு அவரது நிர்வாண புகைப்படங்கள், வீடியோக்களை அனுப்பியதாகவும், ஆசிரியையிடம் தனது நிர்வாண படங்களை பரிமாறி கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து ஆசிரியையிடம் விசாரணை நடத்திய போது மாணவனுக்கு நிர்வாண படங்களை அனுப்பியதை ஒப்புக் கொண்டார். மேலும் அந்த மாணவன் மைனர் என்பது தனக்கு தெரியாது என்று தெரிவித்தார்.

இதையடுத்து ஆசிரியையை போலீசார் கைது செய்தனர். அவர் மீது கற்பழிப்பு முயற்சி, குழந்தைகளின் ஆபாச படங்களை வைத்திருத்தல், சாட்சியை சேதப்படுத்துதல், சிறுவர்களுக்கு ஆபாச தகவல்களை அளித்தல் என குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

## 160ல் பைக் பயணம்: நொறுங்கிய எலும்புகள்: சாகசங்கள் தேவையா?




அமெரிக்கா, அக். 28

அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியில் அட்லான்டிக் கடலை ஒட்டியுள்ள மாநிலம் புளோரிடா (Florida). இதன் தலைநகரம், டல்லஹாசி (Tallahassee)

இம்மாநிலத்தை சேர்ந்த ஒரு இளைஞர், "ஸ்ட்ரீட் டெமன் பிசி" (Street Demon PC) எனும் புனைப்பெயரில் யூடியூப் சேனல் நடத்தி வருகிறார். மிக வேகமாக தனது பைக்கை நெடுஞ்சாலைகளில் ஓட்டி, அதில் சாகசங்களை செய்து காட்டி, அதை நேரிடையாக ஒளிபரப்பு செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார் ஸ்ட்ரீட் டெமன். டெமனுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருப்பதால், இவரது சானலை பலர் பின் தொடர்கிறார்கள்.

இவர், சில தினங்களுக்கு முன் "ஹோண்டா சிபிஆர் 600 ஆர் ஆர்" (Honda CBR 600 RR) அதிவேக சூப்பர் பைக்கில் அம்மாநில அட்லான்டிக் கடற்கரையோரத்தில் உள்ள டேடோனா பீச் (Daytona Beach) பகுதி இன்டர்ஸ்டேட்95 (Interstate95) நெடுஞ்சாலையில் சாகசங்கள் செய்து அதை நேரிடையாக தனது யூடியூப் சேனலில் ஒளிபரப்பினார். பைக்கை மணிக்கு 160 கிலோமீட்டருக்கு மேல் வேகத்தில் ஓட்டி, வெறி பிடித்தவரை போல் வேகத்தை அதிகரித்து, சாலையில் சென்று கொண்டிருந்த வாகனங்களை முந்தி சென்று கொண்டிருந்தார்.

அப்போது முன்னால் சென்று கொண்டிருந்த "ஜிஎம்சி பிக்அப் ட்ரக்" (GMC Pickup Truck) ஒன்றின் மீது மோதினார். தாக்குதலின் தீவிரத்தால் சாலையின் வேறு பகுதிக்கு அந்த டிரக் தள்ளப்பட்டது. உடனடியாக கீழே விழாமல் "டெமன்" பைக்கிலிருந்து கையை எடுக்காமல் சிறிது தூரம் சென்றார். அப்போது அவரை கடந்து சென்ற டிரக் அவரது பைக்கின் பக்கவாட்டில் மோதியது. இதில் பைக்குடன் தலைகுப்புற கீழே விழுந்தார், டெமன். இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினாலும் டெமனுக்கு 20க்கும் மேற்பட்ட எலும்புகள் உடைந்தன. அவரது செயலுக்கு பலர் கண்டனங்கள் தெரிவித்தனர்.

தனது அதிகாரபூர்வ வலைதளத்தில் பிற வாகன ஓட்டுனர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் வாகனத்தை செலுத்திய தனது செயலுக்கு மன்னிப்பு கோரினார் டெமன்.

தமிழ்நாட்டில் சில நாட்களுக்கு முன் யூடியூபர் வாசன் விபத்திற்கு உள்ளானதையும், அவருக்கு ஓட்டுனர் உரிமம் பறிக்கப்பட்டதையும் இதனுடன் தொடர்பு படுத்தி சமூக வலைதளங்களில் பயனர்கள் கருத்து பதிவிடுகின்றனர்.



மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் கிறிஸ்துராஜ் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் 2024 வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டார்.




கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் கலெக்டரக அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

## அனைத்து வசதிகளுடன் அமராவதி அணை பூங்கா புதுப்பிக்கப்படுமா? சுற்றுலா பயணிகள் எதிர்பார்ப்பு

உடுமலை, அக். 28

திருப்பூர் மாவட்டத்தில் சுற்றுலா மையமாக உடுமலை பகுதி அமைந்துள்ளது. அமராவதி அணை, திருமூர்த்திமலை மற்றும் வனப்பகுதிகள் என ஆண்டு தோறும் பல ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் மையமாக உள்ளது.

ஆனால் அவர்களை ஈர்க்கும் வகையிலும், சுற்றுலாவை மேம்படுத்தும் வகையிலும் மாவட்ட சுற்றுலாத்துறை, பொதுப்பணித்துறை உள்ளிட்ட அரசுத்துறைகள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் பெயரளவிற்கு மட்டுமே சுற்றுலா மையமாக உள்ளது. இதில் அமராவதி சுற்றுலா மையத்தில் அமராவதி அணை மற்றும் பூங்கா, வனத்துறை முதலை பண்ணை, அமராவதி மலைத்தொடர்கள், படகு சவாரி என சுற்றுலா மையமாக உள்ளது.

ஒரு காலத்தில் சுற்றுலா பயணிகள் ரசிக்கும் வகையில் அணையின் கரை பகுதியில் 10 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய பசுமையான பூங்கா அமைந்திருந்தது. இங்கு பல செயற்கை நீரூற்றுக்கள், அழகான நடை பாதை, புற்கள், வண்ணமயமான செடிகள், பாரம்பரியமான மரங்கள், அவற்றின் வகைகள், இயல்புகள் குறித்த அறிவிப்பு பலகைகள், வண்ண மின் விளக்குகள், செடி, கொடிகளால் ஆன பசுமைக்குடில், அழகான இருக்கைகள், பசுமை பாலங்கள் அமைந்திருந்தன.



அதே போல் அணையின் எதிர்புறம் 2 ஏக்கர் பரப்பளவில், சிறுவர்களுக்கான விளையாட்டுப்பூங்கா, அரிய வகை பறவைகள், 18க்கும் மேற்பட்ட வன விலங்குகள் தனித்தனி அறைகளிலும், பாம்பு வகைகள் தனித்தனி அறைகளிலும், மான் ஆகியவற்றுடன் உயிரியல் பூங்காவும் இருந்தன. மேலும் பூங்காவில், புலி, மான், காளை என சிலைகள் மற்றும் செடி, கொடிகளால் ஆன செயற்கை கூடாரம் என சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஏராளமான அம்சங்கள் இருந்தன.

சுற்றுலா பயணிகள் ஏராளமாக வந்தாலும் அணை பூங்காவை பராமரிப்பதில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அலட்சியம் காரணமாக அணை பூங்கா முட் புதர்கள் முளைத்தும், விளையாட்டு உபகரணங்கள் உடைந்து ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. உயிரியல் பூங்கா முழுவதும், சிதிலமடைந்தும் காணப்படுகிறது. இங்கு அமைக்கப்பட்டிருந்த செயற்கை நீரூற்றுகள், அவற்றின் உபகரணங்கள் உடைந்தும், மின் விளக்குகள் திருடப்பட்டும் சமூக விரோதிகளின் கூடாரமாகவும், மது அருந்தும் இடமாகவும் பூங்கா மாறியுள்ளது. அணை பூங்கா முழுவதும் அடர்ந்த வனப்பகுதி போல் மாறியுள்ளதால், பாம்புகள், காட்டுப்பன்றிகள் ஆக்கிரமித்து சுற்றுலா பயணியருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

அதே போல் அவர்களுக்கு குடிநீர், கழிப்பிடம் என அடிப்படை வசதிகள் இல்லை. வாகனங்கள் பார்க்கிங் செய்ய ஒதுக்கப்பட்டிருந்த நிலங்களும் மாயமாகியுள்ளது. அணை மற்றும் அணைப்பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகளிடம் கட்டணம் வசூலிக்கும் அதிகாரிகள், அணை பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து கண்டு கொள்வதில்லை. அழகாக இருக்க வேண்டிய பூங்கா அலங்கோலமாக மாறியுள்ளதால் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருவோர் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்லும் அவல நிலை உள்ளது.

எனவே அமராவதி அணை பூங்காவை முழுமையாக புதுப்பிக்கவும், தொடர்ந்து பராமரிக்கவும், சுற்றுலா பயணிகள் வரும் வாகனங்களுக்கு பார்க்கிங் வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிடம் என அனைத்து வசதிகளையும் ஏற்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அணை பூங்காவை புதுப்பிக்க, பொதுப்பணித்துறை சார்பில் சுற்றுலா வளர்ச்சித்துறை சார்பில் பல முறை திட்ட அறிக்கைகள் தயாரித்து அரசுக்கு நிதி கோரி அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் அணை பூங்கா அடையாளத்தை இழந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஒரே சுற்றுலா தலமாக உள்ள நிலையில் இதனை மேம்படுத்த வேண்டும். தமிழகத்திலேயே சிறப்பு வாய்ந்த கள்ளி வகைகள் இருக்கும் வகையில், பாறை பூங்கா அமைக்கப்பட்டது. பல்வேறு வகையான மற்றும் வடிவங்களிலுள்ள கள்ளி செடிகள் இங்கு அமைக்கப்பட்டு பல வண்ண மலர்களுடன் அவற்றின் ரகங்கள், இயல்புகள் குறித்து அறிவிப்பு பலகைகள் என அழகாக காணப்பட்டது. சுற்றுலா பயணிகளுக்கு மட்டுமின்றி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தாவரங்கள் குறித்த அறிவு வளர்க்கும் அம்சமாகவும் இருந்தது. தற்போது கள்ளிப்பூங்காவும் பராமரிப்பின்றி, அடையாளத்தை இழந்து அடர்ந்த வனமாக மாறியுள்ளது.

## திருமுருகன்பூண்டி அருகே பாறைக்குழியில் பற்றி எரியும் தீ விபத்து



திருப்பூர், அக். 28

திருப்பூர் திருமுருகன்பூண்டி நகராட்சிக்குட்பட்ட அம்மாபாளையம் கணபதிநகரில் தனியாருக்கு சொந்தமான 50 அடி ஆழம் கொண்ட பாறைக்குழி உள்ளது. அங்கு திருமுருன்பூண்டி நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று மாலை 6 மணிக்கு பாறைக்குழியில் உள்ள குப்பை தீப்பிடித்து எரிவதாக திருப்பூர் வடக்கு தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் வந்தது. இதன்பேரில் நிலைய அலுவலர் வீரராஜ் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் பாறைக்குழி ஆழமாக இருந்ததால் பலமணி நேரம் போராடியும் தீயை அணைக்க முடியவில்லை. இதையடுத்து தனியார் லாரிகள் மூலமாகவும் தண்ணீர் கொண்டு வரப்பட்டு தீயை அணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இரவு 11 மணி வரை போராடியும் தீயை கட்டுப்படுத்த முடியவில்லை. இன்று 2வது நாளாகவும் குப்பைகள் பற்றி எரிகின்றன. இதையடுத்து அவிநாசி தீயணைப்பு நிலைய வீரர்களும் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## சம்பல்பூர் —ஈரோடு சிறப்பு ரெயில்களின் சேவை நீட்டிப்பு

திருப்பூர், அக். 28

பயணிகளின் நெரிசலை தடுக்க சம்பல்பூர் (ஒடிசா) ஈரோடு இடையே வாராந்திர சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த சிறப்பு ரெயில்களின் சேவைக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ரெயில் எண்: 08311 சம்பல்பூர் ஈரோடு வாராந்திர சிறப்பு ரெயில் நவம்பர் 29ந் தேதி வரை தொடர்ந்து இயக்கப்படும். ரெயில் சம்பல்பூரில் இருந்து புதன்கிழமை காலை 10:55 மணிக்கு புறப்பட்டு வியாழக்கி ழமை இரவு 7:50 மணிக்கு ஈரோட்டுக்கு சென்றடையும். ரெயில் எண்: 08312 ஈரோடு சம்பல்பூர் வாராந்திர சிறப்பு ரெயில் டிசம்பர் 1ந்தேதி வரை தொடர்ந்து இயக்கப்படும். ஈரோட்டில் இருந்து வெள்ளி மதியம் 1:45 மணிக்கு புறப்பட்டு சனி இரவு 9:15 மணிக்கு சம்பல்பூரை சென்றடையும். ரெயில் எண்: (08311) சம்பல்பூர் ஈரோடு வாராந்திர சிறப்பு ரெயில் வியாழன் அன்று சேலம் ரெயில் நிலையத்திற்கு மாலை 6:42 மணிக்கு வந்து 6:45க்கு புறப்படும். ரெயில் எண் (08312) ஈரோடு சம்பல்பூர் வாராந்திர சிறப்பு ரெயில் வெள்ளி அன்று சேலம் ரெயில் நிலையத்திற்கு மதியம் 2:47 மணிக்கு வந்து 2:50 மணிக்கு புறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடுமலை பகுதி சிவன் கோவில்களில் அன்னாபிஷேகம்

உடுமலை, அக். 28

கார்த்திகை பவுர்ணமியன்று திருவண்ணாமலை தீபம் ஏற்றுவது போன்று ஐப்பசி மாத பவுர்ணமியன்று அன்னாபிஷேகம் செய்து சிவனை வழிபடுவது சிறப்பானதாகும். அன்னாபிஷேகத்தில் சிவபெருமானை தரிசனம் செய்வதால் பல கோடி லிங்கங்களை ஒரே நேரத்தில் வழிபட்ட பலன் கிடைப்பதுடன் கடன், வறுமை நீங்கி, பாவங்கள் விலகி செல்வ வளம் சேரும். இதனால் ஐப்பசி மாத பவுர்ணமியன்று சிவாலயங்களில் அன்னாபிஷேக விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் நாளை (சனிக்கிழமை) அன்னாபிஷேக விழா நடைபெற உள்ளது. இதற்காக உடுமலை பகுதியில் உள்ள சிவாலயங்கள் வண்ண வண்ண விளக்குகள், மாவிலை தோரணங்கள், வாழை மரங்கள் கட்டி விழாவுக்கு தயாராகி வருகிறது.

பொதுமக்களும் அன்னாபிஷேகத்திற்கு தேவையான அரிசி, பழவகைகள் காய்கறிகள் உள்ளிட்டவற்றை கோவில்களுக்கு கொடுத்து வருகின்றனர். மேலும் நேற்று பிரதோஷத்தை யொட்டி சிவாலயங்களில் சிவபெருமான், நந்தியம் பெருமானுக்கு 16 வகையான அபிஷேக பொருட்களைக் கொண்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## பள்ளி வளாகத்தில் இளம்பெண் கற்பழித்து கொலை: உடலை மீட்டு போலீசார் விசாரணை



திருப்பூர், அக். 28

திருப்பூர் தாராபுரம் ரோடு கே.செட்டிப்பாளையத்தில் அரசு பள்ளி உள்ளது. இங்கு புதிதாக வகுப்பறை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்குவதற்காக பள்ளி வளாகத்தில் தகர செட் அமைக்கப்பட்டு இருந்தது. இந்தநிலையில் இன்று காலை அந்த செட்டில் இருந்து கடும் துர்நாற்றம் வீசியது.

இதையடுத்து பள்ளி மாணவர்கள் அங்கு சென்று பார்வையிட்டனர். அப்போது அங்கு இளம்பெண் ஒருவர் அழுகிய நிலையில் இறந்து கிடந்தார்.

உடனே இது குறித்து பள்ளி ஆசிரியர்கள் நல்லூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். பின்னர் இறந்து கிடந்த பெண்ணின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அந்த பெண்ணுக்கு 30 வயது இருக்கும். அவர் யார், எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விவரம் தெரியவில்லை. கற்பழித்து கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். கட்டிடப்பணியில் ஈடுபட வந்த பெண்ணா அல்லது மர்மநபர்கள் வேறு எங்காவது இளம்பெண்ணை கற்பழித்து கொன்று இங்கு வந்து போட்டு சென்றார்களா? என்று பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் திருப்பூரில் மாயமான பெண்களின் விவரம் குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

பள்ளி வளாகத்தில் இளம்பெண் கற்பழித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் திருப்பூரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தி.மு.க., ஆட்சியால் விவசாயம், நெசவு தொழில் அழிந்து வருகிறது: எடப்பாடி பழனிசாமி



காங்கயம், அக். 28

திருப்பூர் மாவட்டம் காங்கயத்தில் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி காங்கேயம் வந்தார்.

அப்போது காங்கேயம் பஸ் நிலையம் எதிரே 52 அடி நீளம் உயரமுள்ள கொடி கம்பத்தில் அ.தி.மு.க. கொடியை ஏற்றி வைத்தார். பின்னர் தொண்டர்கள் மத்தியில் அவர் பேசியதாவது:

விடியா தி.மு.க. அரசு பொறுப்பேற்று 2½ ஆண்டுகள் ஆகின்றன. இந்த 2½ ஆண்டுகளில் மக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இந்த பகுதி நெசவு, வேளாண் தொழில் நிறைந்த பகுதி. இந்த தொழில் செய்பவர்கள் தி.மு.க. அரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொப்பரை விலை அ.தி.மு.க. ஆட்சியில் ஏற்றி கொடுக்கப்பட்டது. மும்முனைமின்சாரம் கொடுக்கப்பட்டு வேளாண் துறை சிறப்பாக இருந்தது. தி.மு.க. அரசு விவசாயிகளுக்கு 2 லட்சம் பம்பு செட் கொடுத்துள்ளதாக சொல்கிறார்கள். ஆனால் எப்போது மின்சாரம் வரும், வராது என தெரியாமல் விவசாயிகள் அவதியுறுகின்றனர். அந்த அளவுக்கு மின் தடை உள்ளது. அதேபோல் நெசவாளர்கள் துணிக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. இதனால் கைத்தறி, விசைத்தறி தொழில் புரிபவர்கள் நலிவடைந்து தறிகளை எடைக்கு போடும் நிலை ஏற்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் நெசவாளர்கள், விவசாயிகள் மகிழ்ச்சியாக இருந்தனர். ஆனால் விவசாயம், நெசவு தொழில் தி.மு.க. ஆட்சியில் அழிந்து வருகிறது. ஒட்டுமொத்த தமிழகமும் அழிவு பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

எனவே இந்நிலை மாற பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க.விற்கு உங்கள் ஆதரவினை தர வேண்டும். அ.தி.மு.க. நிறுத்தும் வேட்பாளரை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## செங்கப்பள்ளி அருகே தேசிய நெடுஞ்சாலையில் மோட்டார் சைக்கிள் மீது கார் மோதி நகைக்கடை அதிபர் பலி

திருப்பூர், அக். 28

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூரில் ஊத்துக்குளி ரோட்டில் வசித்து வருபவர் சிவக்குமார்(52). இவரது மாமனார் தண்டபாணி (வயது 67). இவர் செங்கப்பள்ளி அருகே உள்ள பல்லகவுண்டம்பாளையத்தில் நகைக்கடை வைத்து நடத்தி வருகிறார். சம்பவத்தன்று தண்டபாணி, தனது மோட்டார் சைக்கிளில் சேலம் கோவை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள காங்கயம் பாளையம் பிரிவு அருகே சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த கார் ஒன்று பலமாக மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்ட தண்டபாணிக்கு தலையில் பலத்த காயம் அடைந்தது. உடனே அப்பகுதியில் உளளவர்கள் அவரை அங்கிருந்து மீட்டு, பெருந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் தண்டபாணி ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இதுகுறித்து ஊத்துக்குளி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## தாராபுரத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்: 2ந்தேதி நடக்கிறது

திருப்பூர், அக். 28

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: டாக்டர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்ட அலுவலகம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் தாராபுரம் மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2.11.2023 அன்று காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை நடைபெறவுள்ளது. இம்முகாமில் 200க்கும் மேற்பட்ட முன்னணி தனியார்துறை நிறுவனங்கள்கலந்துகொண்டு தங்கள் நிறுவனங்களுக்கு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். 10ம் வகுப்பு, பிளஸ்2, ஐடிஐ, டிப்ளமோ, டிகிரி, பொறியியல் மற்றும் தொழிற்கல்வி பெற்றவர்கள், கணினி இயக்குபவர்கள், ஓட்டுநர்கள், தையல் கற்றவர்கள் என அனைத்து வித தகுதியாளர்களும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசமானதாகும். இம்முகாமில் பங்கேற்க www.tnprivatejobs.tn.gov.in, என்ற இணையதள முகவரியில் முன்பதிவு செய்து கொள்ளலாம். இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் இலவசதிறன்மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, மாவட்ட தொழில் மையத்தின் தொழில்முனைவோர்களுக்கான ஆலோசனைகள், மாவட்ட முன்னோடி வங்கியின் வாயிலாக வங்கி கடன் குறித்த வழிகாட்டுதல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தினை 04212999152 அல்லது 94990 55944 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

## சந்திரகிரஹணத்தால் சிவன் கோவில்களில் அன்னாபிஷேக வழிபாடு நேரம் மாற்றம்

திருப்பூர், அக்.28

ஐப்பசி மாத பவுர்ணமி நாளில் சிவாலயங்களில் அன்னாபிஷேகம் நடத்துவது வழக்கம். குறிப்பாக மாலை 6 மணிக்கு, மூலவருக்கு அபிஷேகம் நடத்தி, அன்னத்தால் லிங்கத்திருமேனிக்கு அலங்காரம் செய்து பக்தர் வழிபடுவர்.

வருகிற 28ந் தேதி, ஐப்பசி பவுர்ணமி என்பதால், சிவாலயங்களில் அன்னாபிஷேக பூஜைக்கு ஏற்பாடு நடந்தது.

இந்நிலையில் பவுர்ணமி நாளில், சந்திரகிரஹணம் ஏற்படுவதால் அன்னாபிஷேக நேரம் மாற்றப்பட்டுள்ளதாக, கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

திருப்பூர் ஸ்ரீவிசாலாட்சி சமேத ஸ்ரீவிஸ்வேஸ்வர சுவாமி கோவிலில், வழக்கமாக மாலை நேரம் நடக்கும் அபிஷேக பூஜை, 28ந் தேதி காலை நேரத்திலேயே நடக்கிறது. காலை 10:30 மணிக்கு சிறப்பு அலங்காரமும், அதனை தொடர்ந்து 11 மணி முதல் 12 மணி வரை அன்னாபிஷேகமும், 12:30 மணிக்கு தீபாராதனையும் நடைபெற உள்ளது. அதனை தொடர்ந்து, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

கிரஹணம் ஏற்படுவதால், கோவில்கள் வழக்கம் போல் மதியம் நடை அடைக்கப்பட்டு, அடுத்த நாள் (29ந் தேதி) காலை 6 மணிக்கு திறந்து சாந்திபூஜைகள் செய்து, வழக்கமான பூஜைகள் நடைபெறும்எனகோவில்நிர்வாகம் அறிவித்துள்ளது.

சாமளாபுரம் தில்லைநாயகி சமேத ஸ்ரீசோழீஸ்வரர் கோவிலில் மாலை 4 மணிக்கு அபிஷேக பூஜை துவங்குகிறது. மாலை 6 மணிக்குள் அன்னாபிஷேக பூஜைகள் நிறைவு செய்யப்படும். இரவு 7 மணிக்கு, கிரஹணத்தை முன்னிட்டு நடை அடைக்கப்படும் என கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

## தாசில்தார்கள் பணியிட மாற்றம்

திருப்பூர், அக். 28

திருப்பூர் மாவட்ட வருவாய்த்துறையில் நிர்வாக நலன் கருதி, தாசில்தார் நிலையில் அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி, மடத்துக்குளம் தாசில்தாராக இருந்த செல்வி காங்கயம் ஆதிதிராவிடர் நல (நிலம் எடுப்பு) தனிதாசில்தாராகவும், ஊத்துக்குளி தாசில்தாராக இருந்த தங்கவேல் காங்கயம் சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராகவும், தமிழ்நாடு மாநில வாணிப கழக உதவி மேலாளராக (சில்லறை விற்பனை) இருந்த சரவணன் ஊத்துக்குளி தாசில்தாராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுபோல் காங்கயம் சமூக பாதுகாப்பு திட்ட தனிதாசில்தாராக இருந்த பானுமதி மடத்துக்குளம் தாசில்தாராகவும், காங்கயம் ஆதிதிராவிடர் நல (நில எடுப்பு) தனிதாசில்தாராக இருந்த நந்தகோபால் திருப்பூர் தமிழ்நாடு வாணிப கழக உதவி மேலாளராக (சில்லறை விற்பனை) பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுபோல் 5 துணை தாசில்தார்களும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, திருப்பூர் வடக்கு தாசில்தார் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராகஇருந்த சிவசுப்பிரமணியன் திருப்பூர் தெற்கு வட்ட வழங்கல் அதிகாரியாகவும், திருப்பூர் துணை தாசில்தாராக இருந்த தமிழேஸ்வரன் கலெக்டர் அலுவலக சமூக பாதுகாப்பு திட்ட தலைமை உதவியாளராகவும், தெற்கு வட்ட வழங்கல் அதிகாரியாக இருந்த புஷ்பராஜன் மாவட்ட கலெக்டர் அலுவலக வரவேற்பு துணைதாசில்தாராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்லடம் தலைமையிடத்து துணைதாசில்தாராக இருந்த முருகேஸ்வரன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்2 துணை தாசில்தாராகவும், சாலை மேம்பாட்டு திட்ட துணை தாசில்தாராக இருந்த சிவக்குமார் பல்லடம் தலைமையிடத்து துணை தாசில்தாராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான உத்தரவை திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் பிறப்பித்துள்ளார்.

## அரசு ஆஸ்பத்திரிகளுக்கு அதிரடி உத்தரவு

திருப்பூர், அக். 28

டெங்கு காய்ச்சல் பரிசோதனை முடிவுகளில் தாமதம் கூடாது.

மாதிரி எடுத்த 6 மணி நேரத்துக்குள் முடிவுகளை வழங்கி விட வேண்டும் என ஆய்வகங்களுக்கு சுகாதாரத்து றை அறிவுறுத்தியுள்ளது.

காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வரும் சூழலில், நான்கு நாட்களுக்கு மேல் காய்ச்சல், சளி, இருமல், உடல்சோர்வு தொடர்பவர்கள் டெங்கு காய்ச்சல் பரிசோதனை செய்து கொள்கின்றனர்.

மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி அரசு தலைமை மருத்துவமனை, தாலுகா மருத்துவமனை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் டெங்கு காய்ச்சல் பரிசோதனை செய்து கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் டெங்கு காய்ச்சல் பரிசோதனை பணிகளை வேகப்படுத்த வேண்டும்.

மாதிரி எடுத்த அடுத்த 6 மணி நேரத்துக்குள், நோயாளிக்கு பரிசோதனை விபரங்களை அளித்து விட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மாவட்ட மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை தரப்பில் இருந்து, அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனை, ஆய்வகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒருவருக்கு டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டு விட்டால் அவர் குறித்த விபரங்களை உடனடியாக நோய்தடுப்பு சிறப்பு அதிகாரி,

மாநகராட்சி நகர் நல அலுவலர், சுகாதாரப் பணிகள் துறை துணை இயக்குனருக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிசியோதெரபிஸ்ட் நியமிக்க கோரிக்கை

திருப்பூர், அக். 28

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில், பிசியோதெரபிஸ்ட்டுகளை நியமிக்க வேண்டும் என தமிழ்நாடு பிசியோதெரபி மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் ராஜேஸ்கண்ணா கூறியதாவது:

மருந்தில்லா மருத்துவ சிகிச்சை முறைகளில் பிசியோதெரபி மருத்துவம் முக்கிய பங்காற்றி வருகிறது. இச்சிகிச்சையில் உடலுக்கு வெளியில் பாதிப்பு உள்ள பகுதியில் மட்டும் சிகிச்சை அளிப்பதால் பக்கவிளைவுகள் ஏதும் இல்லை.

ஆனால் அரசு மருத்துவமனைகளில் போதிய பிசியோதெரபி மருத்துவர்கள் இல்லை. பக்கவாதத்தின் தாக்கம் தமிழகத்தில் அதிகரித்துள்ளது. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகளில் பிசியோதெரபிஸ்ட்டுகளை, இதுவரை நியமிக்கவில்லை.

இதனால் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், வாழ்நாள் முழுவதும் பாதிப்புடன் வாழ வேண்டிய சூழலுக்கு தள்ளப்படுகின்றனர். மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் ஒரு சில பிசியோதெரபிஸ்ட்டுகளே உள்ளனர். இதனால், அனைத்து நோயாளிகளுக்கும், தொடர் சிகிச்சை அளிக்க முடியாத நிலை உள்ளது.

இப்பிரச்னைக்கு தீர்வாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உடனடியாக பிசியோதெரபிஸ்ட்டுகளை, தமிழக அரசு நியமிக்க வேண்டும். அரசு, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும், பயிற்சி பிசியோதெரபிஸ்ட்டுகளை ஊக்க ஊதியத்துடன், தற்காலிகமாக பணியில் அமர்த்த வேண்டும். ஆரம்ப, வட்டார மருத்துவமனைகளில் பக்கவாதத்திற்கு சிகிச்சை அளிக்க, போதிய மருத்துவ வசதிகளை ஏற்படுத்த வேண்டும். முதல்வரின் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில், பிசியோதெரபி சிகிச்சையை சேர்க்க வேண்டும். இதன் வாயிலாக ஏழை மக்களுக்கு இச்சிகிச்சை எளிதில் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## வாய்க்காலுக்குள் மோட்டார் சைக்கிள் பாய்ந்ததில் திருப்பூர் நிதி நிறுவன உரிமையாளர் பலி



தாராபுரம், அக். 28

தாராபுரத்தை அடுத்த வெள்ளை கவுண்டன் புதூர் எரிசனம் பாளையம் பகுதியை சேர்ந்தவர் செந்தில்குமார் (வயது 26). இவருக்கு திருமணம் ஆகி பிரீத்தி என்ற மனைவியும் ஒரு வயதில் குழந்தையும் உள்ளது. இவர் திருப்பூரில் நிதி நிறுவனம் நடத்தி வந்தார். நேற்று முன்தினம் இரவு திருப்பூரில் இருந்து தாராபுரத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றார்.

எரிசனம்பாளையம் பாசன வாய்க்கால் அருகே செல்லும் போது திடீரென நிலைதடுமாறி வாய்க்காலுக்குள் மோட்டார் சைக்கிள் பாய்ந்தது.

இதில் பலத்த காயமடைந்த செந்தில்குமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இது குறித்த தகவல் அறிந்ததும் தாராபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிகண்டன், சப்இன்ஸ்பெக்டர் விஜயபாஸ்கர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரத்தினலிங்கேஸ்வரர் திருக்கோவிலில் பிரதோம்: மூலவர், நந்தி சிறப்பு பூஜை



உடுமலை: அக். 28

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்துள்ள தில்லை நகர் பகுதியில் அமைந்துள்ள ரத்தினலிங்கேஸ்வரர் திருக்கோவிலில் பிரதோஷத்தை யொட்டி மூலவர், நந்தி உள்ளிட்ட கடவுள்களுக்கு சிறப்பு பூஜை நடத்தப்பட்டது.

அப்போது சந்தனம், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம், பால், மஞ்சள், இளநீர், பழரசம், தேன், பஞ்சாமிர்தம், பன்னீர், கரும்புச்சர்க்கரை, சந்தனாதி தைலம் உள்ளிட்ட 16 வகையான திரவியங்கள் கொண்டு அபிசேகம் நடத்தப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொணடு சிவன் நந்தியை பற்றி பக்தி பாடல்களை பாடி சாமி தரிசனம் செய்தனர்.

## அரசுப்பள்ளி மாணவர்களின் சுயவிபரங்களை 'எமிஸ்' இணையதளத்தில்பதிவேற்றம் செய்ய உத்தரவு

திருப்பூர்: அக். 28

தமிழகத்தில் உள்ள அனைத்து வகை பள்ளி மாணவர்களின் விபரங்களை தொகுக்கும் வகையில், பள்ளிக்கல்வி மேலாண்மை முறைமை (எமிஸ்) இணையதளம் கொண்டுவரப்பட்டது. இதில், அரசுப்பள்ளிகளை பொறுத்தவரை மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் குறித்த விபரங்கள், பள்ளியின் கட்டமைப்பு குறித்த அனைத்து தகவல்களும் அவ்வப்போது பதிவேற்றப்படும். எமிஸ் புள்ளி விபர அடிப்படையில் தான் ஆசிரியர் காலியிடம் கணக்கிடுதல், மாணவர்களுக்கு நலத்திட்ட பொருட்கள் கொள்முதல் செய்வது, புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் உள்ளிட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். வழக்கமாக கல்வியாண்டு தொடங்கும் போது ஆகஸ்டு மாதம் இறுதி வரை அட்மிஷன் நடப்பதால், அவ்வப்போது புதிதாக சேரும் மாணவர் விபரங்கள் உள்ளீடு செய்யப்படும். தற்போது விஜயதசமி அட்மிஷன்தொடக்க வகுப்புகளுக்கு நடத்தியதால், மீண்டும் மாணவர் விபரங்களை அப்டேட் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவரின் சுயவிபரங்கள் அனைத்தும், சரியாக இருப்பதை உறுதி செய்யுமாறு தெரிவிக்கப்பட்டதால் ஆசிரியர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இடைநிலை ஆசிரியர்கள் சிலர் கூறுகையில், எமிஸ் இணையதளத்தில் சர்வர் குளறுபடியால், உள்ளீடு செய்யப்படும் தகவல்கள் புதுப்பிக்கப்படாமல் உள்ளது. மாதந்தோறும் இப்பணிகள் மேற்கொள்வதால், கற்பித்தலில் ஈடுபட முடியாதசூழல்நீடிக்கிறது. தொழில்நுட்ப குளறுபடிகளை சரிசெய்துவிட்டு, அப்டேட் பணிகள் மேற்கொண்டால் மட்டுமே இச்சிக்கலுக்கு தீர்வு காண முடியும் என்றனர்.

# கலைத்திருவிழா போட்டிகள்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்

திருப்பூர், அக். 28

திருப்பூர் மாநகராட்சி ஜெய்வாபாய் மாதிரி நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 20232024ம் ஆண்டுக்கான மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகளை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில், செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில் இந்த விழா நடைபெற்றது.

விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தாவது:

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அறிவிப்பின்படி 20222023 ம்ஆண்டு முதல் கலைத்திருவிழா போட்டிகள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்சியாக2023 2024ம் கல்வி ஆண்டிலும் கலைத்திருவிழா போட்டிகள் மாவட்ட அளவில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வித்துறையின் முன்னெடுப்பின்படி மாநிலம் முழுவதும் அரசுப்பள்ளிகளில் கலைத்திரு விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடனம், இசை, ஓவியம், நாட்டுப்புற கலைகள், நவீன கலை வடிவங்கள் என பலவற்றிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் தங்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தி வருகிறார்கள்.பள்ளி மாணவர்களின் கலைத்திறனை ஊக்கப்படுத்துவதன் வழியாக அவர்களுக்கு கல்வியின் மீதான ஈடுபாட்டையும் வளர்த்தெடுக்க முடியும்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் கலைத்திருவிழாப் போட்டிகள் 10.10.2023 முதல் 14.10.2023 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில் 1,25,613மாணவர்கள் பங்கேற்று 32,860 மாணவர்கள் வெற்றி பெற்றனர். தொடர்ந்து வட்டார அளவிலான போட்டிகள் 18.10.2023 முதல் 21.10.2023 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில் 22,994 மாணவர்கள் பங்கேற்று 8,877மாணவர்கள் வெற்றிபெற்றனர். மேலும், கலைத்திருவிழாப்போட்டிகள்மாவட்ட அளவில் ஜெய்வாபாய்மாதிரி நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி 28.10.2023 வரை நடைபெறவுள்ளது. இக்கலைத்திருவிழாவில் பல்வேறு போட்டிகளில் 6,801 மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர். அதனைத்தொடர்ந்து, மாநில அளவிலான போட்டிகள் 21.11.2023 முதல்24.11.2023 வரை நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் கட்டுரை, பேச்சு, ஓவியம்,நடனம், இசைக்கருவிகள் இசைத்தல் முதலிய வகைகளில் கீழ்க்கண்ட 3பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகிறது. 6 முதல் 8 ம் வகுப்பு மாணவர்களுக்கு 33வகையானபோட்டிகள், 9 முதல் 10 ம் வகுப்பு மாணவர்களுக்கு 75 வகையான போட்டிகள் மற்றும் 11 முதல் 12 ம் வகுப்பு மாணவர்களுக்கு 82 வகையான போட்டிகள் நடைபெறுகிறது.கலை திருவிழா போட்டிகளில் மாநில அளவில் சிறப்பாக செயல்படும் மாணவர்களுக்கு கலையரசன்,கலையரசி விருதுகள் தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படவுள்ளது. மேலும் கலைத் திருவிழாப் போட்டிகளில் சிறப்பாக செயல்படக்கூடிய20மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்வி சுற்றுலா அழைத்துச்செல்லப்படுவார்கள். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் பாலசுப்பரமணியன், திருப்பூர் மாநகராட்சி4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கீதா, கவுன்சிலர் திவாகரன், மாவட்ட கல்வி அலுவலர் பக்தவச்சலம், ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ராஜராஜ சோழன் சதய விழா: அவிநாசி கோவிலில் தேவாரம் பாடி புகழாரம்

அவிநாசி, அக். 28



தேவாரத்தை மீட்டெடுத்த திருமுறை கண்ட ராஜ ராஜ சோழ மாமன்னனின் 1038 வது ஐப்பசி சதய பெருவிழா அவிநாசி கோவிலில் நடைபெற்றது.அவிநாசியிலுள்ள லிங்கேஸ்வரர் கோவில் வளாகத்திலுள்ள ஸ்ரீகருணாம்பிகை அம்மன் கலையரங்கில், ராஜ ராஜ சோழனின் 1038 சதய பெருவிழா நடைபெற்றது. இதை யொட்டி திருஞானசம்மந்தர், அப்பர், சுந்தரர் அருளிய திருப்பதிகம் முற்றோதல் செய்யப்பட்டது.

ஓதிய பலனை தரக்கூடிய 25 திருப்பதிகங்கள் கொண்ட தேவார திரட்டு பண்ணொன்று விண்ணப்பித்தல், திருமுறை கலாநிதி கரூர் குமாரசாமிநாத தேசிகர் தலைமையில், ஓதுவாமூர்த்திகள் மற்றும் பக்க வாத்திய கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டு ஓதப்பட்டது.

முன்னதாக விநாயகர் பெருமானுக்கும், நால்வர் பெருமக்களுக்கும் அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான சிவனடியார்கள் பங்கேற்று முற்றோதல் செய்தனர். நிகழ்ச்சியில் கோவில் செயல் அலுவலர் பெரிய மருது பாண்டியன், அறங்காவலர்கள் பொன்னுசாமி, ரவிபிரகாஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

# திருப்பூர் தாசில்தார்கள் துணை கலெக்டராக பதவி உயர்வு

திருப்பூர், அக். 28

தமிழகத்தில் தாசில்தாராக பணியாற்றிய 22 பேருக்கு துணை கலெக்டராக பதவி உயர்வு வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி திருப்பூர் மாவட்டத்தில் தாசில்தாராக இருந்த ராஜகோபால் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன துணை கலெக்டராகவும் (நிலம் எடுப்பு), திருப்பூரில் தாசில்தாராக இருந்த முத்துராமன் சென்னை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயலாளராகவும் (குடியிருப்புகள்), திருப்பூரில் தாசில்தாராக இருந்த கிருஷ்ணவேணி கடலூர் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளராகவும் (நிலம் எடுப்பு) நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கானஉத்தரவை அரசு செயலாளர் ராஜாராமன் பிறப்பித்துள்ளார்.

# அம்சாரம்மன் சமேத வேடியப்பன் கோவில் கும்பாபிஷேகம்

சேலம், அக். 28





சேலம் உடையாப்பட்டி குபேர கணபதி, சப்த கன்னிமார்கள், திரவுபதி அம்மன்,சப்தமுனியப்பன்கள், அம்சாரம்மன் சமேத வேடியப்பன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

இவ்விழாவை முன்னிட்டு கடந்த 18ந்தேதி (புதன்கிழமை) காலை மகா கும்பாபிஷேக முகூர்த்தக்கால் நடப்பட்டது.

தொடர்ந்து நேற்று காலை வேடியப்பன் கோவிலுக்கு உடையாப்பட்டி கருமாரியம்மன் கோவில் வளாகத்தில் இருந்து தீர்த்தக்குடம் மற்றும் முளைப்பாரி எடுத்து அழைத்துவருதல்நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு வாஸ்து சாந்தி பிரவேச பலி, மாலை6.30மணிக்கு கலாகர்ஷனம், யாகசாலை பிரவேசம், முதற்கால யாக பூஜைகள், இரவு 8.30 உபசார பூஜை, 9.30 பஞ்சலோகம், நவரத்தினம், அஷ்டபந்தன மருந்து சாற்றுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதையடுத்து இன்று காலை உடையாப்பட்டி கருமாரியம்மன் கோவில் வளாகத்தில் இருந்து மேள தாளங்கள் முழங்க பால் குடம் எடுத்து அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதையடுத்து 2ம் கால யாக பூஜைகள், வேதபாராயணம், மூலமந்திர ஹோமங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் தனூர் லக்னத்தில் யாத்ராதானம், கடம் புறப்பாடு, வேடியப்பன் சாமி மற்றும் பரிவார தெய்வங்கள் அனைத்திற்கும் மகாகும்பாபிஷேகம் எனும் நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது. அதன் பிறகு மகா அபிஷேகம், அலங்காரம், கோ பூஜை, மகா நெய்வேத்தியம், மகாதீபாராதனை ஆசீர்வாதம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் ஊர் பொதுமக்கள், பக்தர்கள், குல பங்காளிகள் தங்கள் குடும்பத்தினருடன் திரளாக பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

# உணவு கடைகளில் பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் ஆய்வு

சென்னை, அக். 28

தமிழ்நாட்டின் முதல்அமைச்சராக 1969ல் முதல் முறையாக பொறுப்பேற்ற கருணாநிதி, தொலைநோக்கு பார்வையுடன் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி திட்டங்களை வடிவமைத்து, 1971ல் சிப்காட் நிறுவனத்தை உருவாக்கினார்.

கருணாநிதி தொடங்கி வைத்த சிப்காட்டின் சகாப்தம் இன்று மாபெரும் வளர்ச்சி அடைந்து, 16 மாவட்டங்களில், 28 தொழில் வளாகங்கள், 6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் என 38 ஆயிரத்து 538 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக வளர்ந்து நிற்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு கருணாநிதி இட்ட சிப்காட் எனும் இந்த சிறுவிதை இன்று 3 ஆயிரத்து 142 தொழில் நிறுவனங்களின் நம்பிக்கையை வென்று சுமார் ரூ.1.62 லட்சம் கோடிக்கும் மேல் முதலீடுகளை ஈர்த்து, சுமார் 7.5 லட்சம் பேருக்கும் மேல் வேலை வாய்ப்பை வழங்கி ஆலமரமாக வளர்ந்து தமிழ்நாட்டின்வளர்ச்சிக்குவித்திட்டு உள்ளது. உலகின் முன்னணி நிறுவனங்களான ஹூண்டாய், கேட்டர் பில்லர், செயிண்ட் கோபைன் போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்கம் அளித்த கருணாநிதி, ஸ்பிக், அசோக் லேலாண்ட், டைட்டான் போன்ற இந்திய நிறுவனங்கள் உலகளாவிய அளவில் ஏற்றுமதி செய்வதற்கான உற்பத்தி வசதி வாய்ப்புகளையும் சிப்காட் வளாகங்கள் மூலம் உருவாக்கினார்.

இதுதவிர, சர்வதேசத்தரத்துடன் கருணாநிதி உருவாக்கிய சிறுசேரி சிப்காட் தகவல் தொழில்நுட்ப பூங்கா இன்று பல அயல்நாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்த்து, லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கி உள்ளது. அவர்தம் வழியில் தற்போது தமிழ்நாட்டின் முதல்அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலின், கருணாநிதியின் இந்த தொழில் வீச்சை மேலும் மேலும் மெருகேற்றி நவீன தேவைக்கு ஏற்ப கட்டமைத்து வருகிறார். அதன்படி, சிப்காட் தனது பயணத்தில் பல மைல்கற்களை உருவாக்கி வருகிறது. இந்த நிலையில், கருணாநிதியின் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பங்கேற்ற விழாக்கள் மற்றும் தொழில்துறை சார்பில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய தொகுப்புகளின் புகைப்படங்களை கொண்ட புகைப்பட மாடத்தை தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் நேற்று திறந்து வைத்து, பார்வையிட்டனர். அதன் பின்னர் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் தொழில் துறையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், சாதனைகள் குறித்த குறும்படமும் வெளியிடப்பட்டது.

இந்த விழாவில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், சிப்காட் மேலாண்மை இயக்குனர் எ.சுந்தரவல்லி, டிட்கோ மேலாண்மை இயக்குனர் ஜெயஸ்ரீமுரளிதரன், சிப்காட் செயல் இயக்குனர் பி.ஆகாஷ், டிட்கோ செயல் இயக்குனர் ஜெயசந்திர பானு ரெட்டி மற்றும்சிப்காட் நிறுவன உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பலா பழம் விற்று வீடும், நிலமும் வாங்கிய கோடீஸ்வர விவசாயி

பரமத்திவேலூர், அக். 28



பரமத்திவேலூர் வெற்றிலை ஏலசந்தைக்கு வரத்து அதிகரித்ததால் வெற்றிலை விலை சரிவடைந்துள்ளது. பரமத்திவேலூர் சுற்று வட்டார பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வெற்றிலைகள் கர்நாடகா, கேரளா, குஜராத், மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும்தினந்தோறும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை இளம்பயிர்மார்104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.7 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்து 500க்கும், வெள்ளைக்கொடி வெற்றிலை முதியம் பயிர் மார் சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை முதியம் பயிர் மார் சுமை ஒன்று ரூ.ஆயிரத்து 200 க்கும் ஏலம் போனது. வெற்றிலை வரத்து அதிகரித்ததால் வெற்றிலை விலை விலை சரிவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பலா விவசாயத்துல வெளியில இருந்து வேலை ஆட்கள் தேவையில்லை.

எல்லா விவசாயிகளும் பலா மரம் வளர்க்கலாம்.

பெரும்பாலான விவசாயிகள் கடன் தொல்லை போன்ற பிரச்சினைகளில் சிக்கி அதில் இருந்து மீள முடியாமல் தவித்து கொண்டு இருக்கின்றனர். இந்த சூழலில் வெறும் 7 ஏக்கர் பலா தோட்டத்தில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு வீடு, கார், நிலம் என செழிப்பான வாழ்வை வாழும் ஒரு விவசாயி குறித்து கேள்விப்பட்டதும் ஆச்சரியமாக இருந்தது.

கடலூர் மாவட்டம் பண்ருட்டியைச் சேர்ந்த கருணாகரன் தான் அந்த வெற்றி விவசாயி. பலா பழங்கள் கொத்து கொத்தாக காயத்து இருந்த அவருடைய தோட்டத்திற்கே நேரில் சென்று அவரைசந்தித்தோம்."1988 ல இந்த தோட்டத்துல பலா கன்னு வச்சேன். மொத்தம் 7 ஏக்கர்ல 700 மரம் வச்சுருக்கேன்.4வருசத்துலஇருந்தே வருமானம் வர ஆரம்பிச்சுருச்சு. 1998க்கு அப்பறம் ஒரு ஏக்கர்ல ஒரு லட்சமும் 7 ஏக்கருக்கு 7 லட்சம் வருமானம் பார்க்க ஆரம்பிச்சேன்.

பலாவுக்கு பதிலா கம்பு, கேள்வரகு, வேர்கடலை மாதிரி மற்ற பயிர்கள வச்சா இவ்வளவு வருமானம் வராது. 10 ரூபாய் செலவு பண்ணா 5 ரூபாய் தான் வரும். சுத்தி கம்பேனிங்க வந்துட்டனால எல்லாம் அங்க வேலைக்கு போயிட்றாங்க.விவசாய வேலைக்கு ஆளுங்க கிடைக்குறது ரொம்ப சிரமம். ஆனா, பலா விவசாயத்துல வெளியில இருந்து வேலை ஆட்கள் தேவையில்லை. நான் ஒரே ஆளே 7 ஏக்கரையும் பாத்துக்கிறேன். காய் வெட்றதுக்கு மட்டும் ஒரு ஆள் இருந்தா போதும்." என்றார்.

தண்ணீர் பயன்பாடு குறித்து கேட்ட போது, "இங்க தென் மேற்கு பருவ மழை ஒரு மூணு மாசமும், வட கிழக்கு பருவ மழை ஒரு மூணு மாசமும் பெய்யும். அதுனால அந்த மாசத்துல தண்ணி பாய்ச்ச வேண்டிய தேவை இல்ல. மாசி, பங்குனி, சித்திரையில மட்டும் இரண்டு இல்ல மூண்ணு முறை தண்ணி பாய்ச்சுவேன். பொதுவா பலா மரத்துக்கு அதிகமா தண்ணியும் தேவை இல்ல.

விற்பனை செய்யுறதுலயும் பெரிய சவாலாம் இல்ல. வியாபாரியே நேரடியா வந்து வாங்கிட்டு போயிருவாங்க. அப்படி இல்லனா கூட கமிஷன் மண்டிக்கு அனுப்பி வித்துறலாம். அதுனால, காய் விக்கிறதுல எந்த பிரச்சினையும் இல்ல." என கூறியவர் தனது தோட்டத்திலேயே அதிக காய் விளையும் ஒரு தாய் மரத்தை பற்றி பேச ஆரம்பித்தார்.

"2008ல ஒரு கின்னஸ் ரெக்கார்ட் பண்ணலாம்னு முயற்சி பண்ணேன். தோட்டக் கலை துறை அதிகாரிங்க முன்னாடியே ஒரு காய எடை போட்டு பார்த்தோம்.அந்தகாய்110கிலோ வந்துச்சு. ஆனா, கொஞ்சம் தாமதமா அப்ளை பண்ணனால ரெக்கார்ட்ல பதிய முடியல. இதே போல இந்த மரத்தோட தாய் மரத்துலயும்பலகாய்கள்பெரிசுபெரிசா வந்துச்சு. அந்த காய வாங்குறது ஆந்திரால இருக்குற நெல்லூர்ல இருந்து ஆள் வருவாங்க. அப்போவே ஒரு காய 300 ரூபாய்க்கு வாங்கிட்டு போனாங்க. அந்த சமயத்துல ஒரு ஏக்கர் நிலத்தோட விலையே 100 ரூபாய் தான்" என கூறி மலைப்பூட்டினார்.

மேலும், தொடர்ந்த அவர் "3 ஏக்கர் தோட்டத்துல பலா வில இருந்து வந்த வருமானத்த சேமிச்சு வச்சு நிலம் வாங்குனேன். அந்த நிலத்தோட மதிப்பு இப்போ ரூ.3 கோடி வரும். அதேபோல 15 வருசத்துக்கு முன்னாடி 30 லட்சத்துல ஒரு வீடு கட்டுனேன். அதோட மதிப்பு இப்போ ஒரு கோடி வரும். இது மட்டுமில்லாம 2009ல ஸ்போர்ட் காரும் வாங்குனேன். பலா மரத்தால நல்லா வருமானம், நிம்மதியான வாழ்க்கை. என்னைய பார்த்து சுத்தி இருக்குற விவசாயிங்க நெறைய பேரு பலா வளர்க்குறாங்க. அதுனால, எல்லா விவசாயிகளும் பலா மரம் வளர்க்கலாம்.

நல்லா பராமரிச்ச ஏக்கருக்கு வருசத்துக்கு கண்டிப்பா ஒரு லட்சம் வருமானம் பார்க்கலாம்" என உறுதியாககூறினார்தனை விவசாயி திரு. கருணாகரன். மரம் சார்ந்த விவசாயம் குறித்து இலவச ஆலோசனைகள் பெற காவேரி கூக்குரல் இயக்கத்தை 80009 80009 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# உணவு கடைகளில் பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் ஆய்வு

பரமத்திவேலூர், அக். 28



நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரில் உள்ள உணவகங்கள், பாஸ்ட் புட் கடைகள், மற்றும் பலகார கடைகள் பேக்கரிகள் உள்ளிட்ட பல்வேறு கடைகளில் உணவு பாதுகாப்பு அலுவலர் நேற்று ஆய்வு மேற்கொண்டார். நாமக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் டாக்டர் அருண் உத்தரவின் பேரில் பரமத்திவேலூரில் உணவு பாதுகாப்பு அலுவலர் செல்வகுமார் தலைமையிலான குழுவினர் பரமத்திவேலூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் உணவகங்கள், பாஸ்ட்புட் கடைகள் மற்றும் பலகார கடைகள், பேக்கரிகள், டீக்கடைகள், சிற்றுண்டி கடைகள் உள்ளிட்ட பல்வேறு கடைகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது உணவகத்தில் வைத்திருந்த சமையல் எண்ணெய் மற்றும் குளிர்சாதன பெட்டியில் வைத்திருந்த மாமிசங்கள் மற்றும்உணவுப் பொருட்களை ஆய்வு செய்தனர். குளிர்சாதன பெட்டியில் வைத்திருந்த சாதம் மற்றும் மீதமாகி போன உணவுப் பொருட்களை பறிமுதல் செய்து குப்பையில் கொட்டி அளித்தனர். ஆய்வுக்கு பின்னர் சில உணவகங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ்கொடுத்துள்ளார்.

# வாலிபரை கத்தியால் வெட்டி செல்போன், பணம் பறிப்பு

மறைமலைநகர், அக்.28

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பகுதியை சேர்ந்தவர் ரஞ்சித் குமார் (வயது 25). இவர் மகேந்திரா சிட்டி பகுதியில் தங்கி அதே பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று தனது சொந்த ஊருக்கு சென்று விட்டு மீண்டும் பஸ் மூலம் சிங்கப்பெருமாள் கோவிலில் வந்து இறங்கினார். பின்னர் தங்கி இருக்கும் இடத்திற்கு சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 வாலிபர்கள் திடீரென ரஞ்சித் குமாரை வழிமறித்து கத்தியால் அவரை வெட்டி விட்டு அவரிடம் இருந்து செல்போன் மற்றும் பணத்தை பறித்து கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்று விட்டனர். இது குறித்து ரஞ்சித்குமார் மறைமலைநகர் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# 2 இடங்களில் கண்காணிப்பு கேமிரா பொருத்திய வனத்துறையினர்

தாளவாடி, அக். 28

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இங்கு யானை, சிறுத்தை, புலி, கரடி, காட்டு எருமை, மான்கள் உள்பட ஏராள மான வன விலங்குகள் வசித்து வருகின்றன.

தாளவாடி வனச்சரகத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் இருந்து வெளியேறும் சிறுத்தைகள் அவ்வபோது விவசாய தோட்டத்துக்குள் புகுந்து ஆடு, மாடு, நாய்களை வேட்டையாடுவது தொடர்கதையாகி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தொட்ட காஜனூர் பகுதியை சேர்ந்த குணசேகரன் என்பவரின் ஆட்டை சிறுத்தை கடித்து கொன்றது. இது குறித்து தாளவாடி வனத்துறைக்கு தகவல் அளித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த வனத்துறை கால் தடயங்களை ஆய்வு செய்து ஆட்டை கொன்றது சிறுத்தை என உறுதி செய்தனர்.

தொடர்ந்து கால்நடைகளை சிறுத்தை வேட்டையாடி வருவதால் அப்பகுதி விவசாயிகள் பீதியடைந்துள்ளனர். கால்நடை களை வேட்டையாடி வரும் சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதனை யேற்று வனத்துறையினர் குணசேகரன் தோட்டத்தில் 2 இடங்களில் கண்காணிப்பு கேமிராக்களை பொருத்தி சிறுத்தை நடமாட்டத்தை கண்காணித்து வருகின்றனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
28.10.2023



## விக்ரம் நடித்துள்ள 'தங்கலான்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு

இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இந்த படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எப். குறித்த கதை என்று இயக்குனர் பா.இரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் தேதி மற்றும் படத்தின் டீசர் வெளியாகும் தேதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி 'தங்கலான்' திரைப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி 26ந்தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த படத்தின் டீசர் வருகிற நவம்பர் 1ந்தேதி வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ரசிகர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

## மலையாளத்தில் அறிமுகமாகும் அனுஷ்கா

அருந்ததி பேய் படத்தில் நடித்து பிரபலமான அனுஷ்கா தமிழ், தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். ரஜினிகாந்த், விஜய், அஜித்குமார், விக்ரம், சூர்யா, மாதவன், ஆர்யா ஆகியோருடன் நடித்துள்ளார்.

அனுஷ்காவின் சினிமா வாழ்க்கையில் பாகுபலி முக்கிய படமாக அமைந்தது. இஞ்சி இடுப்பழகி படத்தில் உடல் எடையை கூட்டி நடித்து பின்னர் குறைக்க முடியாமல் அவதிப்பட்டார். இதனால் பட வாய்ப்புகள் குறைந்தன.

அனுஷ்காவும் தெலுங்கு நடிகர் பிரபாசும் காதலிப்பதாகவும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்து இருப்பதாகவும் தொடர்ந்து கிசுகிசுக்களும் வருகின்றன. இந்தநிலையில் இதுவரை தமிழ், தெலுங்கு படங்களில் கொடி கட்டி பறந்த அனுஷ்கா தற்போது முதல் தடவையாக மலையாள படமொன்றில் அறிமுகமாக இருக்கிறார்.

இந்தப்படத்தை 'ஹோம்' படத்தை இயக்கிய பிரபலமான ரோஜின் தாமஸ் இயக்க இருக்கிறார். இதில் மலையாள நடிகர் ஜெயசூர்யாவுடன் இணைந்து அனுஷ்கா நடிக்க இருக்கிறார்.

இந்தப்படம் சரித்திர கதையம்சம் கொண்ட இரண்டு பாகங்களாக தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.





## மீண்டும் திரையில் ஜொலிக்கும் பிரபலங்கள்




1980 மற்றும் 90களில் கொடி கட்டி பறந்த பல முன்னாள் கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகிகள் இப்போதும் சினிமாவில் ஜொலிக்கிறார்கள்.

சினிமா இப்போது டிஜிட்டலுக்கு மாறியுள்ளது. ஆனாலும் படங்களை பிலிம்மில் எடுத்த காலகட்டத்தை சினிமாவின் பொற்காலம் என்றும், அந்த காலத்து நடிகர்நடிகைகளை பொற்கால நட்சத்திரங்கள் என்றும் திரைப்பட ஆர்வலர்கள் பாராட்டுகின்றனர்.

யார் வேண்டுமானாலும் சினிமாவுக்கு வரலாம் என்ற நிலையில் திரையுலகம் தற்போது எல்லோருக்கும் எட்டும் தூரத்தில் இருந்தாலும், இன்றைய நட்சத்திரங்களின் சினிமா வாழ்க்கை நீண்ட காலம் நீடித்திருப்பதில்லை.

கருப்பு, வெள்ளை காலத்தில் நடித்த நடிகர்நடிகைகள் ஆகட்டும், சினிமாவை கலரில் எடுக்க ஆரம்பித்த காலமாகட்டும் அப்போதைய நடிகர்கள் நடிப்பு பயிற்சி, நாடக பயிற்சி பெற்றவர் கள், குழந்தை நட்சத்திரமாக நடித்தவர்கள் என்ற தகுதிகளோடு வந்தனர். அதனால் சினிமாவில் நீடித்து நிற்க முடிந்தது.

இப்போது நடிக்க ஆர்வம் இருந்தாலும் அதற்கான பயிற்சி இல்லை. அதன் காரணமாக ஓரிரு வெற்றியை பார்த்துவிட்டு அப்படியே அமைதியாக சினிமாவை விட்டு விலகி விடுகின்றனர்.

அந்த வகையில் 1980 மற்றும் 90களில் கொடி கட்டி பறந்த பல முன்னாள் கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகிகள் இப்போதும் சினிமாவில் ஜொலிக்கிறார்கள். அவர்களில் சிலரை பற்றிய விவரம்:

மோகன்: தமிழ் சினிமாவில் உடலை வருத்தி நடிப்பவர்கள் மத்தியில் அலட்டிக் கொள்ளாமல் நடித்த மோகனின் `பாடி லாங்குவேஜ்' ரசிகர்கள் மனதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பாடல் காட்சிகளில் உணர்வுகளை அப்படியே ஒரு தேர்ந்த பாடகரைப் போல் வெளிப்படுத்தி இருப்பார். பல சில்வர்ஜூப்ளி வெற்றியை கொடுத்தார். இப்போதும் அவருக்கு மவுசு உள்ளது. தற்போது 'ஹரா', விஜய் நடிக்கும் படம் என பிசியாக இருக்கிறார்.

கார்த்திக்: வாரிசு நடிகராக சினிமாவில் நுழைந்தாலும் தன்னுடைய தனித்துவமான நடிப்பாலும் திறமையாலும் தனக்கான ஒரு இடத்தை அமைத்துக் கொண்ட கார்த்தி பல வெற்றி படங்களை கொடுத்த சூப்பர் ஹீரோ. இப்போது 'தீ இவன்' படத்தில் கதையின் நாயகனாக நடித்துள்ளார்.

அர்ஜுன்: தமிழ் சினிமாவை ரஜினி, கமல் போன்ற ஜாம்பவான் நடிகர்கள் ஆக்கிரமித்து இருந்த காலகட்டத்திலேயே தன்னுடைய அதிரடியான சண்டைக் காட்சிகள் மூலம் ரசிகர்களை தன் வசப்படுத்தியவர் `ஆக்ஷன் கிங்' என்று அழைக்கப்படும் அர்ஜுன். சில வருடங்களுக்கு முன் அஜித் படத்தில் வில்லனாக நடித்த இவர், இப்போது 'லியோ' படத்தில் விஜய்க்கு வில்லனாக நடித்து வரவேற்பு பெற்றார். தொடர்ந்து பல முன்னணி நடிகர்களின் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.

சத்யராஜ்: பல ஆண்டு காலமாக தமிழில் மட்டுமே நடித்து வந்த சத்யராஜ் 'பாகுபலி'க்கு பிறகு பல மொழி இயக்குனர்களும் தேடும் ஒரு பிசியான நடிகராக மாறியுள்ளார்.

ராமராஜன்: பல வெற்றிப்படங்களில் நடித்துள்ள ராமராஜன் இப்போது 'சாமானியன்' படத்தில் நடித்து வருகிறார்.

ரகுமான்: 'புதுப்புது அர்த்தங்கள்' படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் நீங்காத இடம் பிடித்தவர் ரகுமான். 'துருவங்கள் பதினாறு' இவருடைய கம்பேக் படமாக அமைந்தது. தொடர்ந்து பல மொழிகளில் பிஸியாக நடித்து வருகிறார். சமீபத்தில் 'சமரா' படம் வெளியானது.

ராதிகா: யதார்த்தமான நடிப்பால் தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்திய ராதிகா இப்போது முன்னணி நட்சத்திரங்களின் படங்களில் முக்கியத்துவம் வாய்ந்த வேடங்களில் நடித்து வருகிறார்.

ரம்யா கிருஷ்ணன்: தமிழ் சினிமாவில் ஸ்டைலிஷ் நடிகை ரம்யா கிருஷ்ணனின் `படையப்பா' நீலாம்பரி கேரக்டர் வரவேற்பை பெற்றது. சமீபத்தில் வெளிவந்த 'ஜெயிலர்' படத்தில் இவருடைய அமைதியான நடிப்பு ரசிகர் மத்தியில் அதிகம் பேசப்பட்டது. இதுபோல் மீனா, பூர்ணிமா ஜெயராம், நதியா உள்ளிட்ட மேலும் பல முன்னாள் கதாநாயகிகள் தற்போது குணசித்திர வேடங்களில் கலக்கி வருகிறார்கள்.

## சிவாஜியை அவமதிப்பதாக சர்ச்சை: 'நடிகர் திலகம்' பெயரில் படம் எடுக்க எதிர்ப்பு...!



மலையாளத்தில் 'நடிகர் திலகம்' என்ற பெயரில் புதிய படம் தயாராகிறது. இந்தப்படத்தை தமிழிலும் வெளியிட திட்டமிட்டு உள்ளனர். இதில் தனுசுடன் 'மாரி 2' தமிழ் படத்தில் நடித்து பிரபலமான டோவினோ தாமஸ் நாயகனாக நடிக்கிறார். பிரபல வில்லன் நடிகர் லால் மகன் ஜீன் பால் லால் டைரக்டு செய்கிறார். இந்தப்படம் அரசியலுக்கு வர விரும்பும் நடிகரை மையமாக வைத்து நகைச்சுவை கதையம்சத்தில் தயாராவதாக கூறப்படுகிறது. படத்துக்கு நடிகர் திலகம் பெயர் வைப்பது சிவாஜி கணேசனை அவமதிப்பதாக உள்ளது என்றும் பெயரை மாற்றவேண்டும் என்றும் வற்புறுத்தி சிவாஜி சமூக நலப்பேரவை தலைவர் சந்திரசேகரன் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையிலும் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்திலும் புகார் மனு அளித்துள்ளார். அந்த மனுவில், ''நடிகர் திலகம் என்பது தமிழ் சினிமாவின் கலங்கரைவிளக்கமாக திகழ்ந்த சிவாஜி கணேசனுக்கு ரசிகர்கள் அளித்த அடைமொழி. எனவே நடிகர் திலகம் பெயரை மலையாள நகைச்சுவை படத்துக்கு டைட்டிலாக வைத்து இருப்பது சிவாஜியை நேசிக்கும் தமிழ் நெஞ்சங்களுக்கு அதிர்ச்சியாக உள்ளது. இது சிவாஜி புகழை களங்கப்படுத்தும் செயல். எனவே நடிகர் திலகம் பெயரை படத்துக்கு பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது. பெயரை மாற்றவேண்டும்'' என்று கூறப்பட்டு உள்ளது.



## ஸ்ரத்தா கபூர் லம்போர்கினி சொகுசு கார் வீடியோ வைரல்

நடிகை ஸ்ரத்தா கபூர் ரூ.4 கோடி மதிப்புள்ள லம்போர்கினி சொகுசு காரை வாங்கி உள்ளார். காருடன் இருக்கும் புகைப்படத்தை சமூகவலைத்தளத்தில் வெளியிட்டு மகிழ்ந்துள்ளார். காருக்கு விசேஷ பூஜைகளும் செய்தார். பின்னர் காரை மும்பை வீதிகளில் ஓட்டிச்சென்றார். இந்த வீடியோ சமூகவலைத்தளத்தில் வைரலாகிறது. ஸ்ரத்தா கபூர் மூத்த இந்தி நடிகரான சக்திகபூர் மகளாக ஆஷிக்கி 2 என்ற படத்தின் மூலம் அறிமுகமானார். இந்தப்படம் வெற்றி பெற்றதால் அவருக்கு பட வாய்ப்புகள் குவிந்தன. ஸ்ரத்தா நடித்த ஹைதர், பாகி, ஏ பி சி டி உள்ளிட்ட படங்கள் பெரிய வெற்றியை பெற்றன. தொடர்ந்து படங்களில் பிசியாக நடித்து வருகிறார்.

தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் வெளியான சாஹோ படத்தில் பிரபாஸ் ஜோடியாக நடித்து மேலும் பிரபலமானார். அதிக சம்பளம் பெறும் நடிகைகள் பட்டியலிலும் இருக்கிறார்.

## 'உங்களோடு என்னை ஒப்பிட முடியாது' ரஜினியை பாராட்டிய நடிகர் அமிதாப்பச்சன்

ரஜினிகாந்த் தற்போது 'ஜெய்பீம்' படத்தை இயக்கி பிரபலமான ஞானவேல் டைரக்டு செய்யும் படத்தில் நடித்து வருகிறார். இது ரஜினிக்கு 170வது படம். இந்தப்படத்துக்கு தற்காலிகமாக 'தலைவர் 170' என்று பெயர் வைத்துள்ளனர்.

இதில் இந்தி நடிகர் அமிதாப்பச்சனும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ரஜினியும், அமிதாப்பச்சனும் 1991ல் வெளியான 'ஹம்' இந்தி படத்தில் நடித்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தற்போது மும்பையில் நடக்கும் படப்பிடிப்பில் ரஜினிகாந்தும், அமிதாப்பச்சனும் இணைந்து நடித்து வருகிறார்கள். படப்பிடிப்பு தளத்தில் அமிதாப்பச்சனுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை ரஜினிகாந்த் சமூகவலைத்தளத்தில் பகிர்ந்து, ''33 ஆண்டுகளுக்குப்பிறகு எனது வழிகாட்டியான அமிதாப்பச்சனுடன் இணைந்து நடிப்பதன் மூலம் எனது இதயம் மகிழ்ச்சியில் துடிக்கிறது'' என்று பதிவிட்டு உள்ளார். ரஜினி பதிவுக்கு அமிதாப்பச்சன் பதில் அளித்துள்ளார். அவர் சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ''ரஜினிகாந்த் சார். நீங்கள் என் மீது மிகவும் அன்பு வைத்து இருக்கிறீர்கள். ஆனால் படத்தின் தலைப்பை பாருங்கள், அதில் 'தலைவர் 170' என்று இருக்கிறது. தலைவர் என்றால் லீடர், ஹெட், சீப். நீங்கள்தான் ஹெட். நீங்கள்தான் தலைவர். அதில் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா மக்களே? என்னை உங்களோடு ஒப்பிட முடியாது. உங்களுடன் மீண்டும் பணிபுரிவது எனக்கு பெரிய கவுரவம்'' என்று கூறியுள்ளார்.

## தென் ஆப்பிரிக்க அணி தரப்பில் ஷம்சி அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளையும், மார்கோ ஜான்சன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்



10 அணிகள் கலந்து கொண்டுள்ள 50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை நடந்து முடிந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா அணிகள் முதல் 4 இடங்களில் உள்ளன.

இந்நிலையில் இந்த தொடரில் இன்று நடைபெறும் மிக முக்கியமான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி தென் ஆப்பிரிக்காவை சென்னையில் எதிர்கொள்கிறது. 5 ஆட்டங்களில் ஆடியுள்ள பாகிஸ்தான் 2 வெற்றி, 3 தோல்வி பெற்று 4 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் 6வது இடத்தில் உள்ளது.

அரையிறுதி சுற்றுக்கு முன்னேற எஞ்சியுள்ள அனைத்து ஆட்டங்களிலும் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியில் பாகிஸ்தான் உள்ளது. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பேட்டிங்கை தேர்வுசெய்தது. அதன்படி, அந்த அணி முதலில் களமிறங்கியது.

அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய அப்துல்லா 9 ரன்னிலும், இமாம் உல் ஹாக் 18 ரன்னிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து கேப்டன் பாபருடன் முகமது ரிஸ்வான் ஜோடி சேர்ந்தார். சிறிது அதிரடி காட்டிய முகமது ரிஸ்வான், 31 ரன்கள் எடுத்த நிலையில் கேட்சாகி ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த இப்திகார் அகமது 21 ரன்கள் எடுத்த நிலையில், சிக்ஸ் அடிக்க முயன்று கேட்சாகி அவுட்டானார். தொடக்கம் முதலே நிதானமாக விளையாடிவந்த கேப்டன் பாபர் அசாம் அரைசதம் அடித்த நிலையில், ஆட்டமிழந்தார்.

இதனால் பாகிஸ்தான் அணி 141 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாடியது. இதன் பின்னர் சவுத் சகீல் மற்றும் ஷதாப் கான் இருவரும் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவ்வப்போது பவுண்டரிகளையும் விரட்டி அணியின் ஸ்கோரை உயர்த்தினர். இந்த ஜோடி 6வது விக்கெட்டுக்கு 84 ரன்கள் சேர்த்தது. சவுத் சகீல் அரைசதம் அடித்து 52 ரன்னிலும், ஷதாப் கான் 43 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

சிறந்த தொடக்கம் கிடைத்தும், அதனை பெரிய ஸ்கோராக மாற்ற பாகிஸ்தான் பேட்ஸ்மேன்கள் தவறினர். இறுதியில் பாகிஸ்தான் அணி 46.4 ஓவர்களில் 270 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆல் அவுட் ஆனது.

தென் ஆப்பிரிக்க அணி தரப்பில் ஷம்சி அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளையும், மார்கோ ஜான்சன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இதனை தொடர்ந்து 271 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா அணி களமிறங்க உள்ளது

## 2024ம் ஆண்டு ஐபிஎல் கிரிக்கெட் தொடருக்கான மினி ஏலம் டிசம்பர் மாதம் 18 அல்லது 19ம் தேதியில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது



இந்தியாவில் நடத்தப்படும் 20 ஓவர் கிரிக்கெட் தொடரான இந்தியன் பிரிமீயர் லீக் (ஐபிஎல்) தொடருக்கு இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். இந்நிலையில் 2024ம் ஆண்டுக்கான ஐபிஎல் கிரிக்கெட் தொடருக்கான மினி ஏலம் டிசம்பர் மாதம் 18 அல்லது 19ம் தேதியில் நடக்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

இதையடுத்து ஐபிஎல் தொடரில் ஒவ்வொரு அணிகளிலும் தக்க வைக்கப்பட்ட வீரர்கள் பட்டியலை சமர்ப்பிக்க நவம்பர் 15ம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் ஏராளமான ரசிகர்கள் மனதில் எழும் ஒரே கேள்வி என்னவென்றால் அடுத்த ஐபிஎல் தொடரில் எம்.எஸ்.தோனி விளையாடுவாரா என்பதுதான்.

இந்நிலையில் இந்த கேள்விக்கு பதில் அளிக்கும் விதமாக பெங்களூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தோனியிடம் இருந்து ஒரு பதில் கிடைத்துள்ளது. அதாவது, பெங்களூரில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் சிஎஸ்கே கேப்டன் தோனி கலந்துகொண்டார்

அந்த நிகழ்ச்சியில் தொகுப்பாளர் பேசும் போது, கிரிக்கெட்டில் இருந்து தோனி ஓய்வுபெற்றுவிட்டார் என்று கூறினார். அப்போது தோனிக்கு அருகில் இருந்த நபர், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து மட்டும் தான் தோனி ஓய்வு பெற்றுள்ளார் என்று கூறி தவறை திருத்தினார். அதற்கு தோனி, ஆம் என்று கூற, சிஎஸ்கே ரசிகர்கள் கரகோஷம் எழுப்பினர்.

அதன்பின் தோனியின் காலில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, அறுவை சிகிச்சைக்கு பின் காயத்தில் இருந்து விடுபட்டுவிட்டேன். ஆனால் இன்னும் குணமடையவில்லை. மருத்துவர்கள் நவம்பர் மாதத்தில் முழுமையாக குணமடைவேன் என்று கூறியிருக்கிறார்கள் என தோனி கூறினார். இதன்மூலம் தோனி கட்டாயம் அடுத்த ஐபிஎல் சீசனில் சிஎஸ்கே கேப்டனாக விளையாடுவார் என்று ரசிகர்கள் நம்பிக்கை தெரிவித்து வருகின்றனர்.



## ஒலிம்பிக் போட்டிக்கான ஆசிய மண்டல பெண்கள் கால்பந்து தகுதி சுற்று ஆட்டம் : இந்திய அணி தோல்வி

விளையாட்டு உலகின் மிகப்பெரிய போட்டி தொடரான ஒலிம்பிக் தொடர் அடுத்த ஆண்டு பாரீசில் நடைபெற உள்ளது. இந்த ஒலிம்பிக் போட்டிக்கான ஆசிய மண்டல பெண்கள் கால்பந்து தகுதி சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த தகுதி சுற்று போட்டியின் 2வது ரவுண்டில் இடம் பெற்றுள்ள 12 அணிகள் 3 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதி வருகின்றன. இதன் 'சி' பிரிவு லீக் ஆட்டங்கள் உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கென்டில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த தனது முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி, ஜப்பானை எதிர்கொண்டது.

முதல் பாதியில் தற்காப்பு ஆட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட இந்திய அணி பிறகு சரிவை சந்தித்தது. முடிவில் இந்திய அணி 07 என்ற கோல் கணக்கில் ஜப்பானிடம் படுதோல்வி அடைந்தது. இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் நாளை மறுநாள் வியட்நாமை சந்திக்கிறது.

## பெண்களுக்கான ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி ராஞ்சியில் தொடக்கம்

பெண்களுக்கான 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி ஜார்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் உள்ள ஜெய்பால் சிங் ஸ்டேடியத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்கி நவம்பர் 5ந் தேதி வரை நடக்கிறது. இதில் நடப்பு சாம்பியன் ஜப்பான், 3 முறை சாம்பியனான தென்கொரியா, முன்னாள் சாம்பியனான இந்தியா மற்றும் சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய 6 அணிகள் கலந்து கொள்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை ரவுண்ட் ராபின் லீக் அடிப்படையில் மோதும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

தொடக்க நாளான இன்று 3 லீக் ஆட்டங்கள் நடக்கிறது. முதலாவது லீக் ஆட்டத்தில் ஜப்பான்மலேசியா (மாலை 4 மணி), அடுத்த ஆட்டத்தில் சீனாதென்கொரியா (மாலை 6:15மணி) மோதுகின்றன. 3வது லீக் ஆட்டத்தில் கோல்கீப்பர் சவிதா தலைமையிலான இந்திய அணி, தாய்லாந்தை (இரவு 8 மணி) சந்திக்கிறது. இந்தப் போட்டியை சோனி ஸ்போர்ட்ஸ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.